பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

யோவேல் 2:26

செய்தி மலர்
2021
ஜனவரி

இதழ் : 09
மலர் : 17



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த வருடம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் 2021 ஆம் ஆண்டு முழுவதும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவாராக.

ஆண்டவர் சொல்கிறார் "இதோ நான் அவர்களுக்கு சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி அவர்களை குணமாக்கி அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன். நான் யூதாவின் சிறை இருப்பையும் இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி முன் இருந்தது போல அவர்களை கட்டுவிப்பேன். நான் அவர்களுக்கு செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப் போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்கு முன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும். நான் அவர்களுக்கு அருளிச் செய்யும் எல்லா நன்மையின் நிமித்தமும் எல்லா சமாதானத்தின் நிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமி–33:6–9)

பிரியமானவர்களே, வரும் 2021–ஆம் ஆண்டு வாக்கு தத்தமாக கர்த்தர் நம் சபைக்கு கொடுத்திருக்கிற வசனம்

"என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டு போவதில்லை" என்பதாகும். (யோவேல்–2:26)

ஆண்டவரையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற நம்மை கர்த்தர் பாதுகாத்து, உயர்த்தி நம்முடைய முகங்கள் வெட்கமடையாதபடி பாதுகாப்பார். "அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்த களிப்புடன் பாடி சீயோனுக்கு திரும்பி வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்." (ஏசா–51:11)

ஏன் நம்மை வெட்கப்படாதபடி பாதுகாக்கிறார் என்பதைக் குறித்து கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

## I. அவரை நம்பி இருப்பதால்.......

தாவீது ஜெபித்தான் "கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன் நான் ஒரு போதும் வெட்கம் அடையாதபடி செய்யும் நான் எப்பொழுதும் வந்தடையத் தக்க கன்மலையாயிரும் என்னை இரட்சிப்பதற்கு கட்டளையிட்டீரே நீரே என்

3 "கன்மலையும் கோட்டையுமாயிருக்கிறீர்"என்று (சங்கீ–71:1,3) இப்படி அவன் ஜெபித்ததினாலே கர்த்தர் அவனுக்கு பெரிய பாதுகாப்பை கட்டளையிட்டார். தாவீது போன இடத்தில் எல்லாம் கர்த்தர் அவனை காப்பாற்றினார். அவன் செய்த காரியங்கள் எல்லாம் அனுகூலமாயிற்று. அவனுக்கு ஒரு நிலையான வீட்டைக் கட்டினார். அவனுடைய சத்துருக்களுக்கோ வெட்கத்தை உடுத்தினார். தாவீதின் தலையை உயர்த்தி வைத்தார். அல்லேலூயா.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, அதே கிருபைகளை ஆண்டவர் உங்களுக்கும் தருவார். காரணம் நீங்களும் ஆண்டவரை நம்பியிருக்கிறீர்கள். இயேசு கிறிஸ்து உங்களை இரட்சித்திருக்கிறார். அதனால் எல்லாவிதமான பிசாசின் போராட்டங்களுக்கும் பொல்லாதவர்களின் சூழ்ச்சிகளுக்கும் உங்களை விலக்கி பாதுகாத்து உங்கள் முகங்கள் வெட்கமடையாதபடி செய்வார். மனங்கலங்காதிருங்கள்.

"எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். நம்பின அவர்களை விடுவித்தீர். உம்மை நோக்கி கூப்பிட்டு தப்பினார்கள். உம்மை நம்பி வெட்கப்பட்டு போகாதிருந்தார்கள்". (சங்கீ–22:4,5)

"என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி எனக்கு தீங்கு செய்ய விரும்புகிறவர்கள் பின்னிட்டு இலட்சையடைவார்களாக. என் பேரில் ஆ ஆ ஆ ஆ என்று சொல்லுகிறவர்கள் தங்கள் வெட்கத்தின் பலனை அடைந்து கைவிடப்படுவார்களாக. உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக. உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக" ஆமென். (சங்கீ–25:3,20,40:14–16)

## 1. அவரை விசுவாசிப்பதால்..

"இதோ இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன் அவரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" என்று எழுதியிருக்கிறபடியாயிற்று. (ரோம–9:33)

ஆண்டவரை சார்ந்து அவரை விசுவாசிக்கிற பிள்ளைகள் ஒரு நாளும் வெட்கப்பட்டு போவதில்லை. எந்த இடத்தில் நிந்தைகளையும், அவமானங்களையும், இலச்சைகளையும் அடைகிறார்களோ அதே இடத்தில் தேவன் அவர்களை உயர்த்தி வைத்து எல்லா பார்வைக்கு முன்பாக அவர்கள் தலையை பிரமிக்கத் தக்கவிதத்தில் உயர்த்துவார்.

"நான் கர்த்தரை தேடினேன் அவர் எனக்கு செவி கொடுத்து என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கி பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை" (சங்கீ–34:4,5)

குழந்தையில்லாமல் அன்னாள் வாடினாள். ஆண்டவரின் மீது விசுவாசம் வைத்து அவர் பாதங்களில் விழுந்து விசுவாசத்தோடு ஜெபித்தாள். ஆண்டவர் அதிசயமாய் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையை கொடுத்து அவளை ஆசீர்வதித்தார். எந்த இடத்தில் நிந்தைகளை அவள் அனுபவித்தாளோ அதே இடத்தில் அவள் மகிமைப்படுத்தப்பட்டாள். துன்ப நேரங்களில் ஆண்டவரை விசுவாசித்து ஜெபித்து வேதம் வாசித்து காத்திருக்கும்பொழுது கர்த்தர் நமக்கும் இப்படி பட்ட கிருபைகளை கொடுத்து நம் முகங்கள் வெட்கமடையாதபடி செய்வார். "நான் வெட்கப்பட்டு போகாதபடிக்கு என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாய் இருக்கக்கடவது" (சங்கீ–119:80) "கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணை செய்கிறார் ஆகையால் நான் வெட்கப்படேன். நான் வெட்கப்பட்டு போவதில்லை என்று அறிந்திருக்கிறேன். ஆதலால் என் முகத்தை கற்பாறையைப் போல் ஆக்கினேன்" (ஏசா–50:7)

அந்தப்படியே இதோ தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதன் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை. (1–பேது–2:6)

## 2. அவருக்கு ஊழியம் செய்யும்பொழுது.......

பரிசுத்த பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"(2–தீமோ–2:15)

ஆண்டவருடைய வார்த்தைகளை சுவிசேஷமாய் அறிவிப்பதற்கும், தேவ நாம மகிமைக்காக சாட்சியாய் வாழ்வதற்கும் நாம் ஒரு போதும் வெட்கப்படகூடாது. நம்மை பார்க்கிறவர்கள் இவன் கிறிஸ்துவினுடைய பிள்ளை என்பதை கண்டு கொள்ள வேண்டும். நம்முடைய நடை உடை பாவனைகள் கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும். நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாய் இருக்க வேண்டும். நம்முடைய சொல் செயல் சிந்தனை எல்லாவற்றிலும் இயேசு கிறிஸ்து மகிமையடைய வேண்டும். அப்படி செய்கின்ற பொழுது கர்த்தர் தமது முக பிரகாசத்தை நமக்கும் தருவார். உள்ளத்தின் நிறைவினால் வாய் பேசும் என்ற வசனத்தின்படி நம் உள்ளம் தூய்மையடையும்பொழுது நம்முடைய முகங்களும் பிரகாசிக்கின்றது.

"என்னைக்குறித்தும் என் வார்த்தைகளையும் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ அவனைக்குறித்து மனுஷ குமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்" (லூக்-9:26)

பரிசுத்த பவுல் சொல்கிறார் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவன் இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாய் இருக்கிறது. (ரோம-1:16)

இப்படி இந்த உலகத்திலே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வாழ் நாளில் ஆண்டவருக்காக வாழும்பொழுது நமக்கு நித்தி ஜீவனை ஆண்டவர் நமக்காக வைத்திருக்கிறார். இவ்வுலகிலும் நம்மை ஜெயத்தோடு வாழ வைக்கிறார். மறுமையிலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். இதைத்தான் யோவான் சொல்கிறார் இப்படியிருக்க பிள்ளைகளே அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டு போகாமல் தைரியமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள். (1-யோவா-2:28)

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வரும் புத்தாண்டு முழுவதும் அவரை நம்பி அவரை விசுவாசித்து சாட்சியின் வாழ்க்கை வாழ அருள்புரிவாராக.

உங்கள் வெட்கத்துக்கு பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும் இலச்சைக்கு பதிலாக தாங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள். அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்திரமடைவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்.

கர்த்தருடைய கிருபை உங்கள் ஒவ்வொருவரோடும் தங்கியிருந்து இந்த வருஷ முழுவதும் உங்களை ஆசீர்வதிப்பதாக.

சபையோர் அனைவருக்கும் என் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதரன்

சபையின் ஊழியர் சகோ. ஸ்டாலின்

"..என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டு போவதில்லை". (யோசுவா 2:26)

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே ஆண்டவருடைய மகா பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக.

ஆண்டவர் இந்த வருடத்தின் சபையின் முதல் மலர் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திக்க பாராட்டின கிருபைக்காக நன்றியுள்ள இருதயத்தோடு ஆண்டவரை ஸ்தோத்தரிக்கின்றேன்

இந்த வருடத்தில் ஆண்டவர் நமது சபைக்கு சபையின் ஊழியர் மூலம் கொடுத்த வாக்குத்தத்த வசனம்

"..என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை."

யோவேல் 2:26

ஆண்டவர் எதில் எல்லாம் நம்மை வெட்கப்பட்டு போகாமல் வைக்க போகிறார் நம்முடைய சொந்த வாழ்க்கையில், நம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையில், நம்முடைய வேலைஸ்தலத்தில், நம்முடைய சத்துருக்களுக்கு முன்னில், இப்படி நம்முடைய அன்றாட வாழ்க்கையில் மனிதர்கள் முன்னிலையில், என்று அனைத்திலும் ஆண்டவர் நம்மை வெட்கபடாமல் இந்த ஆண்டு முழுவதம் வழி நடத்த போகிறார்

## முதலாவது நம்முடைய வாழ்க்கையில்

வேதத்தில் (லூக்கா 1 முழுவதம் வாசிக்கும் போது)சகரியாவை எடுத்துக் கொண்டால் அவர் ஒரு ஆசாரிய ஊழியர் இஸ்ரவேலில் ஒரு வழக்கம் உண்டு ஆண்டவர் முன்னிலையில் ஆசாரிய ஊழியம் செய்ய வேண்டிய ஊழியர்களின் பெயர்களை எழுதி சீட்டு போடுவார்கள் யாருடைய பெயருக்கு சீட்டு விழுகிறதோ அவர்கள் அன்று ஆண்டவருக்கு எருசலேம் ஆலயத்தில் ஆராதனை செய்ய வேண்டும், அதன் பின் அவர்கள் பெயர் அந்த ஆலயத்தின் பட்டியலில் இருந்து நீக்கப்படும். இப்படி ஆசாரிய ஊழியம் செய்யும் அனைவருக்கும் வாரிசுகள் உண்டு, அவர்கள் தங்கள் வாரிசுளுடன் அவர்களுக்கு நியமிக்கபட்ட நாளில் ஆண்டவருக்கு ஆராதனை செய்து ஆண்டவருடைய நாமத்தை மகிமைபடுத்துவார்கள். இப்படி இருக்க சகரியாவின் பெயருக்கு சீட்டு விழுகிறது தனிமனிதனாக, உதவிக்கு வாரிசுகள் இல்லை, ஆராதனைக்கான அத்துனை பொருட்களையும் ஒருவனாக சுமந்து சென்று ஆண்டவருக்கு ஆராதனை செய்யும் பொழுது மனம் கசந்து ஆண்டவரிடத்தில் கண்ணீரேடு அழுது ஜெபிக்கிறார், நான் எத்தனையோ பக்தர்களுக்காக உம்மிடத்தில் ஜெபித்து குறைகளை நீக்கி இருக்கீங்க ஆனா என்னுடைய இருதயத்தின் வாஞ்சையை நீங்க நிறைவேற்றவில்லையே ஆண்டவரே! எனக்கு ஒரு வாரிசு இல்லாமல் போய்விட்டதே என்று அழுது இந்த ஜனங்கள் மத்தியில் என்னை வெட்க்கப்படுத்தி விடாதீர்கள் என்று ஜெபிக்கிறார்.

ஆண்டவர் (தேவ தூதர் அவருக்கு வாக்குரைக்கிறார் ) அவரை இந்த உலகத்தின் முன் வெட்கபடுத்தாமல் அவருக்கு ஒரு ஆண் குழந்தையை கொடுக்கிறார். அதுமட்டுமல்ல அந்த குழந்தை ஆண்டவராகி இயேசுகிறிஸ்துவுக்கே யோர்தான் நதிகரையில் ஞானஸ்நானம் கொடுக்க கிருபை செய்தார்.

அன்பான தேவ ஜனமே! நம்முடைய ஆண்டவர் நம்மையும் அவ்வாறாக நடத்த வல்லமையுள்ளவர் நாம் செய்ய வேண்டியது சகரியாவை போல (லூக்கா-1:6)ன்படி உண்மையும் உத்தமுமாய் நடக்கும் போது நம்மையும் உலகத்தார் முன் வெட்க்கபடுத்தாமல் நடத்தவர் என்பது திண்ணம்.

## பிள்ளைகளுடைய வாழ்க்கையில்—

வேதத்தில் ஈசாக்கின் இளைய மகன் யாக்கோபுவை எடுத்து கொண்டோமானால் அவன் ஒரு எத்தன் அண்ணனின் புத்திர சுவிகாரத்தை சூழ்ச்சியினால் அபகரித்து கொண்டவன்,தன்னுடைய தாய் மாமனினிடம் தந்திரமாய் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொண்டவன், ஆனாலும் தன் வாழ்க்கையில் எப்பொழுது உண்மையாக ஆண்டவருடைய ஆசீர்வாதம்தான் முக்கியம் என்று இரவு முழுவதும் தேவ தூதரிடத்தில் போராடி அவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டானோ அதன் பின்னர் அவனுடைய ஆசிர்வாதங்கள் நிலைபெற்றன, தன்னுடைய சகோதரனிடத்தில் அவன் சமாதானத்தோடு செல்லவும் அவனுக்கு முன் அவன் வெட்கப்பட்டு போகாமல் இருக்க தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

தேவ ஜனமே! நம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் அவர்கள் முன் நிலை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் இருந்திருக்கலாம். ஆனால் யாக்கோபை போல எப்படி ஆண்டவரிடத்தில் போராடி அவரது ஆசீர்வாதத்தை பெற்று கொண்டானோ, அதனால் அவனுடைய பெயர் மாத்திரம் அல்ல அவனுடைய வாழ்க்கையும் ஆசீர்வாதமாக மாற்றபட்டது. நம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் அவர்கள் மற்றவர்களிடத்தில் வெட்கப்பட்டு போகாமல் இருக்க அவர்களை ஆண்டவருக்கு முன் உண்மையுள்ளவனாக உண்மையுள்ளவளாக இருக்க அவர்களுக்காக பெற்றரோர்களாகிய நாமும் அவர்களுடைய சொந்த வாழ்விற்காக அவர்களையும் ஜெபிக்கிற ஜெப வீர்காள மாற்றுவோம். அப்படி இருக்கும் பட்சத்தில் அவர்களை ஆண்டவர் வெட்கபடுத்தமாட்டார்.

## நம்முடைய வேலைஸ்தலத்தில்—

எலியா பற்றி வேதத்தில் வாசிக்கிறோம் அவருக்கும் பகாலின் பக்தர்களின் மத்தியில் ஒரு தர்க்கம் உண்டாகிறது, எலியா தன் பக்தியால் தேசத்தில் மழையை பெய்ய பண்ணாமல் இருந்த நேரம், இப்படி நிலை இருக்க எலியாவின் தேவன் பெரிய தேவனா அல்லது பகாளின் தெய்வமா என்று ஒரு பெரிய தர்க்கம் நடக்கிறது.

பாகாளின் பக்தர்கள் பாகாளுக்கு படையல் போடுகிறார்கள். எலியாவின் ஜீவனுள்ள தேவனுக்கும் படையல் போட படுகிறது பகாளின் பக்தர்கள் அவர்களின் தெய்வத்தை வேண்டி அழைக்கிறார்கள், அவர்களின் தேவன் வந்தபாடில்லை. அவர்களுடைய நேரம் முடிந்தது. எலியா அழைக்கிறார் அவருடைய நீதியின் நிமித்தம் தேவனுடைய அக்கினி இறங்கி வந்த பலிபீடத்தில் உள்ள அத்தனை பலிகளையும் நக்கி போட்டது.

எலியாவின் பக்தி வைராக்கியத்தை தேவன் ஆமோதித்து அவரை பகாளின் பக்தர்களின் முன் வெட்கபடுத்தாமல், தேவன் எலியாவின் பக்தி வைராக்கியத்தை மெச்சினார்,

அன்பானவர்களே நம்முடைய வேலை ஸ்தலத்திலும் நாம் தேவன் மேல் வைத்திருக்கும் வைராக்கியத்தின் நிமித்தம் உலகத்தார்களின் பழி சொல்லுக்கு முன்

நம்மை கௌரவ படுத்தி நம்தலை குனியால் இருக்க செய்வர் நம்மை ஒரு போதும் வெட்க்கப்படுத்த மாட்டர்.

### சத்துருக்களுக்கு முன் :

வேதத்தில் தாவீதை எடுத்துக் கொள்வோமானால் தாவீது கர்த்தரிடத்தில் உண்மையுள்ளவனாக இருந்ததின் நிமித்தம் அவனுக்கு சத்துருக்கள் அதிகம்

சவுல் தாவீதை கொல்ல வகை தேடுகிறான். ஆனாலும் அவனுக்கு முன் தேவன் அவனை விட்டு கொடுக்கவில்லை அவனது சத்துருக்களுக்கு முன் அவன் தலையை உயாத்தினார்

தன்னுடைய சொந்த மகனே அவனை கொல்ல வகை தேடுகிறான். அவனுடைய கைக்கும் தேவன் அவனை இரட்சிக்கிறார், இவை அனைத்திற்கும் காரணம் தேவனுடைய வீட்டில் எல்லவற்றிலும் அவன் உண்மை யுள்ளவனாக இருந்தான்.

இஸ்ரவேலின் பெரிய ராஜாவாக இருந்தும் தேவனுடைய உடன் படிக்கை பெட்டிக்கு முன்பாக நடனம் ஆடி தேவனுடைய நாமத்திற்கு மகிமை செலுத்தினான். ஏளனமாக பேசியவர்களின் நிலை என்ன என்பது நமக்கு தெரியும்.

பிரியமான தேவ ஜனமே நாம் சற்று உயர்ந்துவிட்டோம் என்றால். சக விசுவாசிகளை மதிப்பது கூட கிடையாது. சபையில் ஆராதனை வேளையில் கை தூக்கி ஆராதிக்க வெட்கம் கை தட்ட வெட்கம் முன் சென்று ஜெபிக்க வெட்கம் அப்படி நாம் வெட்க்கபட்டால் நம்மை ஆண்டவர் உலத்தர் முன் எப்படி வெட்க்கபடாமல் உயர்த்துவர் தேவ ஜனமே நாம் எவ்வளவு பெரிய நிலைக்கு உயர்ந்திருக்கலாம். ஆண்டவருக்கு முன் நம்மை தாழ்த்துவோம் அப்பொழுது ஆண்டவர் நம்மை ஒரு போதும் உலகத்தர் முன் வெட்க்கபட்டு போக பண்ணுவதில்லை.

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ ஜனமே நம்முடைய வாழ்வில் தேவன் நம்மை உயர்த்த வேண்டுமா? வெட்கபடுத்தாமல் நடத்த வேண்டுமா? அவருடைய வாக்குத்தத்தம் நம் வாழ்க்கையில் நிறைவேற வேண்டுமாயின் அவருடைய கற்பனைகளுக்கும் கட்டளைகளுக்கும் நாம் நம்மை ஒப்பு கொடுப்போம்!

நாம் வெட்க்கடாமல் இருக்க நாம் ஆண்டவரிடத்தில் ஜெபத்திலும், அவரை நம் வாழ்க்கயில் அபியாச படுத்தவும், அவரை நம்முடைய வாழ்க்கையில் உயர்த்துவோம் நாம் ஒரு போதும் உலகத்தர் முன்னலையில் வெட்கப்பட்டு போவதில்லை ஆண்டவர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரன்
ஐசக் துரை

**என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.** (யோவேல் 2:26)

## 2020 டிசம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. மோசேயின் மதிப்பின் படி ( லேவி 27:2)
2. அவனுடைய திராணிக்கேற்றபடி ( 27:8)
3. சாபத்தீடான ( லேவி 27:20-21)
4. விற்கவும் மீட்க்கவும் (லேவி 27:28)
5. நல்லதோ இளப்பமானதோ என்று ( லேவி 27:33)
6. போஜன பலி( லேவி 2:3)
7. நிறைந்த பச்சையான கதிர்கள், நெருப்பிலே வாட்டி உதிர்த்து ( லேவி 2:14)
8. ஆசாரிய கூடாரத்துக்கு முன்பாக ( லேவி 3:8)
9. பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ( லேவி 25:34)
10. தோல், மாமிசம் முழுவதும், தலை, தொடைகள், குடல்கள், சாணி, காளை முழுவதும். ( லேவி 4:11,12)
11. நஷ்டத்தோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாக ( லேவி 5:6)
12. பழுதற்ற ஒரு ஆட்டுகடாவை ( லேவி 5:18)
13. புளித்தமாவுள்ளதாக ( லேவி 6:17)
14. பாவ நிவாரண பலி ( லேவி 6:28)
15. அசைவாட்டும் மார்கண்டம் ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடை ( லேவி 7:34)

## 2020 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. மெர்ஸிலின் தயா இயேசுரெத்தினம்
Sis. அனுஷா டினோ
Sis. எழிலரசி டேனியல்

**நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;**

*ஏசாயா 54:3*

10 "...உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத்தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன்; ... " (எரே – 15:20)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெகன்
செல்வன். ஆல்வின் டேவிட் மணிராஜ்
செல்வி. ஷாரோன் ஜெனிஃபர்
சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோதரி. சுசீலா லாசர்
சகோ. ஐசக்துரை
சகோதரி. நவிதா பால்ராஜ்
செல்வன். ஜோஷுவா ஜவல்சிங்
செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
சகோ. சுதாகர்
சகோ. சுபின் சிங்
செல்வி. பிரின்ஸி கமலதாசன்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
சகோ. ஆரோக்கியராஜ்
சகோ. செங்குட்டுவன்

சகோ. ராஜ்
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
சகோதரி. சுமதி ஐசக் துரை
செல்வி. ஷெரீன் பெனிடா ஸ்டாலின்
சகோதரி. விக்டோரியா ராஜன்
செல்வி. சாரா ஆல்வின்
செல்வன். சாமுவேல் ஆல்வின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
செல்வி. அபிகாள் கிரேஸ் ஜஸ்டின்
செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி. அஃபியா சுனில்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிராக வெங்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. பாபு
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி – திரு. வின்ஸனட் சுவீட்
திருமதி – திரு. ஷர்மன்ராஜ்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி –திரு. தினேஷ் குமார்
திருமதி – திரு. கனீஷ் ஜோஸ்வா அமலன்
திருமதி – திரு. பால் ராஜ்
திருமதி – திரு. வேளாங்கன்னி

# 2021 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/01/2021 | சகோ. சுகுமார் | சகோ. பிரசாத் சுந்தரம் |
| 10/01/2021 | சகோ. கிருஸ்டோபர் GTC | சகோ. ஃபிராங்ளின் |
| 17/01/2021 | சகோ. ஐசக் துரை | சகோ. தாமஸ் |
| 24/01/2021 | சகோ. ஃபிராங்ளின் | சகோ. ஜெகநாதன் |
| 31/01/2021 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. கிருஸ்டோபர் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:30 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/01/2021 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.ஜெயசேகர் |
| 08/01/2021 | சகோ. வேலுராமர் | சகோ. ஐசக்துரை |
| 15/01/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/01/2021 | சகோ.வில்ஸன் | சகோ. எபினேசர் |
| 29/01/2021 | சகோ.ஜோசப் | சகோ. கிருஸ்டோபர் |

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !

தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.பிரசாத் அவர்களிடத்திலும் . திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. கிருஸ்டோபர் M. அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஜான்ஸன் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

(சகோ.பிரசாத் – 65519005 ) (சகோ.கிருஸ்டோபர் M – 69058529)

(சகோ. ஜான்ஸன் – 97610275)

# 2021 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. இளைஞருக்கும் மூப்பருக்கும் பேதுரு கூறும் அறிவுரை என்ன?

2. அவபக்தியுள்ள பாவிகளின் நிமித்தம் யார் வருகிறார்?

3. எதெல்லாம் பாவம்? எவைகளுக்கு விலகி நம்மை காத்துக் கொள்ள வேண்டும்

4. நாம் பிதாவாக தொழுது கொண்டு வருகிறவர் எப்படிப்பட்டவர்?

5 நம்மை நாம் எப்படி வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறோம்? அதனால் என்ன நமக்குள் இராது,?

6. தீமை, உதாசீனம் செய்கிறவர்களை நாம் ஏன் ஆசீர்வதிக்க வேண்டும்?

7. நற்சாட்சி பெற்றவன் யார்?

8. மரணத்திலே நிலை கொண்டிருப்பவன் யார்?

9. யார் தேவனை காணவில்லை?

10. தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று சொல்லி, தன் சகோதரனை பகைக்கிறவன் யார்?

11. கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களுக்கும், அக்கிரமகாரருக்கும், என்ன வைத்திருக்கிறார்?

12. நாம் அவருடைய(தேவனுடைய) கட்டளையின்படி நடப்பதே............?

13. திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களுக்கு என்ன நேரிடுகிறது?

14. விசுவாசத்தின் பலன் என்ன?

15. இருளிலே இருக்கிறவன் யார்?

விடைகளை வருகின்ற 20-01-2021 க்குள் (whatsApps #66015503-with Name)அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை I பேதுரு II பேதுரு.. I யோவான் ,,II யோவான்.. III யோவான்.. மற்றும் யூதா.. ஆகிய புத்தகத்தில் இருந்து கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## ரோலண்ட் பின்க்காம் (1872–1942)

மிஷனெரியாகச் சென்றபின் வியாதி பாடுகள் சோர்வுகளைப் பார்த்து என்னால் இனி மிஷனெரிப் பணி செய்ய இயலாது என்று இரு முறை தாயகம் திரும்பிவிட்ட ஒருவரைக் கொண்டு தேவன் மாபெரும் காரியங்களை நிகழ்த்த முடியுமா? ஆம் என்கிறது ரோலண்ட் பின்க்காமின் வாழ்க்கை வரலாறு. சூடான் உள்நாட்டு மிஷன் என்ற மிஷனெரி இயக்கம் இவரால்தான் உருவாக்கப்பட்டது. ரோலண்ட் பின்க்காம் 1872–ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் பிறந்தார். நடுத்தரக் குடும்பமான இவர்களது குடும்பத்தில் அவரது தகப்பனாரின் மரணத்தினால் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட தனது 13–வது வயதில் வேலைசெய்து தனது குடும்பத்தின் பாரத்தைச் சுமந்தார். அந்நாட்களில் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். மூன்று வருடத்திற்குப் பிறகு கனடா தேசத்திற்கு வேலை நிமித்தம் சென்றபோது சுவிசேஷத்தை அறிவிப்பதே தனது முழு முதல் வேலை என்று தேவன் திட்டவட்டமாக உணர்த்துவதை அறிந்தார். அதனால் தேவப்பணி செய்ய இரட்சணியசேனை என்ற ஸ்தாபனத்தில் இணைந்தார்.
அங்கு அவருக்கு மிஷனெரிபாரம் கொண்ட திருமதி கோவன்ஸ் என்பவரைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. திருமதி கோவன்ஸ் தனது மகளை சீனாவுக்கு மிஷனெரியாக அனுப்பி இருந்தார்.

1893–ல் கப்பல் மூலம் சூடான் தேசத்திற்கு மிஷனெரியாக பணயப்பட்டார். அவருடன் தாமஸ் கேனட்டும் என்பவரும் புறப்பட்டார். ஆப்பரிக்காவின் லாகாஸ் என்ற இடத்தை அடைந்தவுடன் அங்கிருந்த மேற்கு ஆப்பிரிக்க மிஷனெரிகள் இவர்களை நோக்கி சூடான் தேசத்தில் உயிர் வாழ்வதே கடினம். அங்குள்ள மலேரியா போன்ற தொற்று வியாதிகள் வந்து உங்களைக் கொன்று விடும் என்றனர். இதனைக் கேட்டவுடன் இதுவரை ஒரு மிஷனெரிகூட சூடான் பகுதிக்குச் சென்று சுவிசேஷம் சொல்லவில்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டு நாம் திரும்பி போகக்கூடாது என முடிவு எடுத்தனர். ஆனாலும் சூடானை நெருங்கும் போது ரோலண்டும் தாமஸும் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

சிறிது நாட்களில் சுகம் பெற்றாலும் மீண்டும் மலேரியாவினால் தாமஸ் தாக்கப்பட்டு மரித்துப் போனார். இதைப் பார்த்தவுடன் ரோலண்டும் விசுவாசத்தில் தடுமாறி உடனே இங்கிலாந்து திரும்பிவிட்டார். இதைக்குறித்து ரோலண்டு தனது குறிப்பில் எழுதும்போது தேவன் பேரில் உள்ள எனது விசுவாசம் அடித்தளம்வரை ஆட்டம் கண்டது. இருளில் இருக்கும் மக்களுக்கு இயேசுவின் கடைசிக் கட்டளையான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தானே சென்றோம். ஆரம்பத்திலே இப்படிப்பட்ட கஷ்டமா? போன்ற பல கேள்விகள் எனது மனதைக் குடைந்தது. இறுதியாக உறுதியான கற்பாறையான தேவன்பேரில் விசுவாசம் வைக்கக் கற்றுக்கொண்டேன் என்கிறார். பின் இங்கிலாந்திலிருந்து கனடா தேசத்திற்கு வந்த

அவர் சூடான் தேசத்திற்கு மறுபடியும் செல்ல ஆயத்தமானார். பணித்தளத்தில் வாழ்வதற்கும் தேவபணி செய்வதற்கும் தன்னை ஆயத்தப்படுத்தும் வகையில் இளநிலை மருத்துவப் படிப்பையும் நியூ யார்க்கில் வேதாகமப் பள்ளியில் வேதாகமப் படிப்பையும் 1895–ல் படித்தார்.

1898–ம் ஆண்டு மே மாதம் சூடான் உள்நாட்டு மிஷன் என்ற மிஷனெரிச் சங்கம் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதே மாதத்தில், ஹெலன் பிளேயர் என்பவரைத் திருமணம் புரிந்தார். மீண்டும் 1900–ம் ஆண்டு பின்க்காம் தம்பதியினர் இரண்டு வாலிப தன்னார்வ ஊழியர்களுடன் சூடானை நோக்கிப் பயணமானார்கள். லூகாஸில் இறங்கியவுடன் மறுபடியும் மலேரியா தாக்கி அதிகமாய் நோய்வாய்ப்பட்டார். உடனே அவரை வீடு திரும்ப இயக்கம் உத்தரவிட்டது. அதிக சோர்வுற்ற ரோலண்ட் பின்க்காம் இப்படி நான் வீடு திரும்புவதற்குப் பதில் இறந்திருந்தால் கூட நலமாயிருக்கும் என்று எழுதுகிறார். சிறிது சிறிதாக சரீரத்தில் பெலன் பெற்ற ரோலண்ட் மறுபடியும் புதியதாக இணைந்த நான்கு மிஷனெரிகளுடன் சூடானை நோக்கி 1901–ல் பயணமானார். அவரது இந்த மூன்றாம் மிஷனெரிப் பயணம் வெற்றியாக அமைந்தது. பத்து வருட ஊழியத்திற்குப் பிறகு வெகு சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக மாறினர். சில புதிய பணித்தளங்களும் திறக்கப்பட்டது. அப்போது மலேரியா நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதுமுதல் மிஷனெரிகள் சூடான் ஆப்பிரிக்காப் பகுதிகளில் பயமில்லாமல் தங்கி ஊழியம் செய்ய ஆரம்பித்தனர்.

மிஷனெரிகள் அங்கு நிலைத்து இருந்ததற்கான மற்ற ஒரு முக்கிய ஆதாரம் ஜெப ஆதரவாளர்களின் ஜெபமே. பணித்தளத்தில் ஊழியம் செய்ய முடியாமல் தடுத்த மலேரியா நோய்க்கு அடுத்ததாக அந்தகார சக்திகள் பற்றிய மக்களின் பயம் மிகப்பெரிய தடையாக இருந்தது. சூடான் எத்தியோப்பியா பகுதிகளில் பேய்களையும், ஆவிகளையும் அதிகம் நம்பினர். தங்களைச் சுற்றிலும் பல பொல்லாத ஆவிகள் இருப்பதாகவும்அதிகம் நம்பினார்கள். அதனால் அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தைச் சொன்னபோது அதை நம்ப மறுத்தனர்.

சூன்யக்காரிகளும், மந்திரவாதிகளும் இவர்களது வாழ்வில் அதிக முக்கியத்துவம் பெற்றனர். ஆப்பிரிக்காவின் சூடான் பகுதியில் தொழு வியாதி அதிகம் பரவி இருந்தது. இந்த வியாதியை முழுவதும் நீக்க மிஷனெரிகள் பிரயாசப்பட்டனர். 1920–ம் வருடம் தொழு வியாதியஸ்தர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட பணிமூலம் 30000 தொழு நோயாளிகளை நைஜீரியாவில் மட்டும் கவனித்து வைத்தியம் பார்த்தனர். இதில் அநேகர் இஸ்லாமியர் இவர்கள் தங்கள் குடும்பத்தின் எதிர்ப்பின் மத்தியிலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். ரோலண்டின் தியாக வாழ்வின் மூலம் ஊழியம் விரிவடைந்தது. எத்தியோப்பாவிலும் சென்று சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு திருச்சபை நாட்டப்பட்டது.

கர்த்தரின் பணியில்,

S.சுகுமார்.

"பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்" – சங்கீ–76:11

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

2021–ஆம் ஆண்டையும் காணச்செய்த தேவனை முதலாவது ஸ்தோத்தரிக்கிறேன். 2020–ஆம் ஆண்டு முழுவதும் பெரும் துயரத்தைக் கண்ட நம்மையும் நேசித்து இந்த புதிய ஆண்டிற்குள்ளாக நடத்தின தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

புத்தாண்டு என்றாலே நம்மில் அநேகர் பலவிதமான தீர்மானங்கள் எடுப்பதுண்டு. தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை விட்டுவிடுவது மறைமுகமான பாவங்களை விடுவது என நாம் அறிக்கைமிட்டு இனி இப்படிப்பட்டதான பாவங்களை செய்யமாட்டேன் என பலவிதமான பொருத்தனைகளை ஏறெடுக்கிறோம்.

ஆனால் அநேக வாலிப சகோதர சகோதரிகள் மற்றும் பெரியவர்கள் இந்த பொருத்தனைகளில் முழுமையாக நிலைநிற்பதில்லை. ஏதோ ஒருசில காரணங்களால் பிசாசானவன் தங்கள் இருதயத்தை கல்லாக்கி மீண்டும் பழைய பாவங்களுக்குள்ளாக அநேகரை விழச்செய்கிறான். மோசே இவ்வாறு கூறுகிறார்.

"ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும் அல்லது யாதொரு காரியத்தை செய்யும்படி ஆணையிட்டு தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும் அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்" என்று கூறுகிறார் (எண்ணா–30:2)

மோசே உபாகமம் புஸ்தகத்தில் 23–ஆம் அதிகாரம், 22–வது வசனத்தில் சொல்கிறார்.

"நீ பொருத்தனை பண்ணாதிருந்தால் உன்மேல் பாவமில்லை எனக்கூறுகிறார்" பொருத்தனையை கர்த்தர் விரும்புகிற தேவன் ஆனால் அதில் நாம் நிலைத்து நிற்கிறதை கவனிக்கிறவராயும் கர்த்தர் காணப்படுகிறார்.

பாவங்களை அறிக்கைமிட்டு தகப்பனே என்னால் விடமுடியாத பாவங்கள் என்னை பின்தொடர்ந்து வருகிறது. இந்த பாவப் பழக்கத்திலிருந்து எனக்கு விடுதலை தாரும் என முதலாவது உங்கள் சரீரத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். இந்த பொருத்தனையைத் தான் தேவன் விரும்புகிறார்.

நம்மில் அநேக சகோதர சகோதரிகளில் பொருத்தனை என்னவென்றால் இந்த விதத்தில் எனக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும், திருமணக் காரியம் நடக்க வேண்டும் அப்படி நடக்கும்போது முதல் மாத சம்பளத்தை தருகிறேன். அல்லது ஆலயத்திற்கு வருகிறவர்களுக்கு சாப்பாடு போடுகிறேன் என நொன்டிச் சாக்கான பொருத்தனைகளை நிறைவேற்றுகிறோம். தேவனை ஒரு வேலை எடுத்துக்கொடுக்கும் ஏஜென்ட்டாக அநேகர் பயன்படுத்துவதை காணமுடிகிறது.

உன்னிடத்தில் பொன்னையோ, பொருளையோ அவர் எதிர்பார்ப்பதில்லை வானத்திற்கு கீழே பூமிக்கு மேலே சகலமும் அவருடையது. சரீர ஆத்துமாவை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் அதைத்தான் தேவன் விரும்புகிறார். இவ்வாறு நம்முடைய சரீரத்தை அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது தேவன் அவருக்கு பிரியமாய் நம்மை மாற்ற வல்லவராய் இருக்கிறார்.

## பொருத்தனை செய்துவிட்ட பாவத்தை மறுபடியும் செய்தல்

இந்த வருடத்தில் நான் இந்த பாவ பழக்கத்தை விட்டு விடுவேன் என்று தீர்மானம் பண்ணி இரட்சிப்புக்குள்ளான பாதையில் வரும்போது பிசாசானவன் பல வழிகளில் நம்மை தடுமாறச் செய்வான். நாம் பிசாசுக்கு இடங்கொடுக்காதபடி நம்முடைய இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக்கொள்ள வேண்டும். தேவனும் நமக்கு உதவி செய்வார். நான் இந்த பாவத்தை தொடரக்கூடாது என நீங்கள் ஒப்புரவானாலே போதுமானது.

இரட்சிக்கப்பட்ட பின்பு ஆண்டவர் நம் வாழ்க்கையில் தரும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் மற்றும் சிற்றின்பங்களினால் தேவனை மறந்து தேவனை தேட நேரமில்லாமல் மீண்டும் பழைய பாவத்தை அநேகர் தொடருகின்றனர். இப்படி அநேகர் பழைய பாவத்தில் விழுகிறதுண்டு. "பிரச்சனை இல்லையென்றால் சாமிக்கு அர்ச்சனையில்லை" என ஒரு பழைய பழமொழி சொல்வதுண்டு. அப்படியாக ஆசீர்வாதமான வாழ்க்கை வாழும்பொழுது பிசாசானவன் பல வழிகளில் நம்மை வீழ்தத்துவதுண்டு.

இப்படிப் பட்டவர்களை அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிக்கிறார் "கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையும் கேடுள்ளதாக இருக்கும். (2-பேது-2:20) அதாவது இரட்சிக்கப்பட்டபின் ஒரு மனிதன் தான் விட்ட பாவத்தை மறுபடியும் போய் செய்வானாகில் அவனுடைய நிலைமை முந்தைக் காட்டிலும் படுமோசமாகி விடும் என எச்சரிக்கிறார்.

பிரியமானவர்களே, பொருத்தனை செய்வது முக்கியமல்ல, பொருத்தனையை நிறைவேற்றுவதே முக்கியம்.

கடந்த வருடத்தின் பாவங்களை மீண்டும் தொடராதபடி தங்களை நாளுக்கு நாள் பரிசுத்தமாக்கிக்கொள்ள முயற்சி செய்யுங்கள். செய்த பொருத்தனைகளை கடைசி வரையிலும் கடைபிடியுங்கள். பொருத்தனைகளில் தேவன் பிரியமுள்ளவராயிருக்கும். உங்களுக்கு கேடு ஒன்றும் வராத படி அசுத்தமானவைகளை களைந்து பரிசுத்தமான பழக்கங்களை அனிந்து கொள்ளுங்கள் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை காண்பீர்கள்.

தேவன் தாமே நம் அனைவரோடுங்கூட இருப்பாராக.

ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே.

# சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் அன்பான அகமதி தமிழ் திருச்சபையின் சகோதரிகளே, எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். புதிய வருடம் எப்படியிருக்குமோ என்று நீங்கள் கலங்கிக்கொண்டிருக்கலாம். பயப்படாதிருங்கள். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் கரம்பிடித்து நடத்துவார்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் மரியாளை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள் அவள் எப்பொழுதும் இயேசுவின் பாதத்திலேயே விழுந்து கிடந்தாள். இயேசுவின் பாதங்களை கெட்டியாய் பற்றிக்கொண்டாள். அதனால் பாருங்கள் ஆண்டவர் உயிர்த்தெழுந்த பிறகு முதன் முதலில் அவளுக்குத் தான் தன்னை வெளிப்படுத்தினாள். காரணம் என்ன தெரியுமா? மனுஷன் முகத்தை பார்ப்பான் ஆனால் தேவனோ இருதயத்தை பார்க்கிறவர். ஆமென். (I-சாமு-16:7)

ஆண்டவரையே நம்பி அவர் மேல் விசுவாசம் வைத்திருந்த அந்த தூய்மையான அன்பையும் அர்ப்பணிப்பையும் ஆண்டவர் பார்த்தார். அவளை கனப்படுத்தினார். அதேவிதமாக ஆண்டவர் உங்களையும் கனப்படுத்துவார்.

ஒரு வேளை உங்கள் மனதை புரிந்து கொள்ளாமல் அடித்து துன்புறுத்துகிற கொடுமையான கணவன் உங்களுக்கு அமைந்திருக்கலாம், காலமெல்லாம் சந்தேகப்பட்டு எரிச்சலடைந்து உங்களை சித்திரவதை செய்கிற கணவனுக்கு நீங்கள் வாழ்க்கை பட்டிருக்கலாம். மனங்கலங்காதிருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதத்தை கெட்டியாய் பிடித்து அவரையே நம்பியிருக்கிற உங்களை ஆண்டவர் உயர்த்துவார். உங்கள் ஜெபத்திற்கு நிச்சயம் பதில் கொடுப்பார். உங்கள் கணவனை அன்புள்ளவராய் மாற்றுவார். இது எப்படியாகும் என்ற கேள்வியோடு கலங்கிப் போயிருந்த மரியாளைப் பார்த்து தேவ தூதன் சொன்னான் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று சொல்லி. அல்லேலூயா.

நம் தேவன் வனாந்திரத்தில் வழியை உண்டு பண்ணுகிறவர். அவாந்திர வெளியிலே ஆறுகளை பெருக்கெடுத்து ஓடச்செய்கிறவர். காற்றையும் கடலையும் அதட்டி அமரச்செய்தவர். செத்துப் போய் நான்கு நாட்களாகிய பிரேதத்தை உயிரோடு எழுப்பியவர். கடல் மேல் நடந்தவர் மரித்து மூன்றாம் நாள் உயிரோடு கூட எழும்பியவர். உங்கள் வாழ்க்கையிலும் அற்புத மாறுதலை தருவார். பாலைவனம் போன்ற உங்கள் வாழ்க்கையை சோலை வனமாக மாற்றுவார்.

## 1. வீட்டிலே மரியாள்..

ஒரு முறை இயேசு மரியாள் மற்றும் மார்த்தாள் என்ற சகோதரிகளின் வீட்டிற்கு சென்றிருந்தார். மார்த்தாள் வீட்டு வேலைகள் செய்வதிலும் ஆண்டவரை உபசரிப்பதிலும் கவனமாக இருந்தாள்.

ஆனால் மரியாளோ! இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தை கேட்டுக்கொண்டிருந்தாள். அப்பொழுத மார்த்தாள் தன் சகோதரி தனக்கு உதவி செய்யாமல் ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து அவர் வார்த்தைகளை கேட்பதை குறை கூறினாள். அப்பொழுது இயேசு அவளுக்கு பிரதியுத்தரமாக மார்த்தாளே மார்த்தாளே நீ அநேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டாள். என்றார். (லூக்-10:38-42)

தாவீது கூட ஆண்டவருடைய சமூகத்தில் வந்து அவர் பாதத்தில் காத்திருப்பதை சுதந்திரமான பங்கு என்று குறிப்பிடுகிறான். (சங்கீ-84:10,சங்கீ-16:6)

நீங்களும் கூட ஆண்டவர் பாதத்தில் அதிக நேரத்தை செலவிட்டு கவலைகளை நினைத்து புலம்பிக்கொண்டிராமல் ஆண்டவருடைய வசனங்களை தியானித்து, ஜெபித்து அவருடைய சத்தத்தை கேட்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்ற கவனமாய் இருக்கும்பொழுது நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போகும் என்ற வசனத்தின்படி உங்கள் கவலைகள் எல்லாம் மாறும். (I-கொரி-13:10)

ஆண்டவருடைய பாதமே உங்களை விட்டு எடுபடாத நல்ல பங்கு. அதுவே தேவையான ஒன்று.

## 2. காட்டிலே மரியாள்..

தன் ஒரே சகோதரன் லாசரு மரித்தபொழுது இயேசு அந்த ஊரில் இல்லை. மரித்து நான்கு நாட்கள் ஆனபிறகுதான் இயேசு வர முடிந்தது. இயேசு வருகிறார் என்று கேள்விபட்ட மரியாள் ஓட்டமாய் ஓடிச்சென்று இயேசுவின் பாதத்தில் விழுந்து கதறி அழுதாள். ஆண்டவரே நீர் இங்கு இருந்திருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் இப்போது எங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு நிலமை ஏற்பட்டு விட்டதே? எங்களுக்கு ஆதரவுக்கு யார் இருக்கிறார்கள்? இருந்த ஒரே சகோதரனையும் இழந்து விட்டோமே? என்று புலம்பினாள். அவள் அழுவதை தாங்கிக்கொள்ள முடியாத இயேசுவும் அவள் மேல் மனதுருகி கண்ணீர் விட்டார். (யோவா-11:32-35)

நம் ஆண்டவர் எவ்வளவு மனதுருக்கம் உள்ளவர் பாருங்கள். ஒரு பெண் வருத்தத்தோடு கண்ணீர் சிந்துவதை நம் ஆண்டவரால் தாங்கிக்கொள்ள முடியாது. உங்கள் கண்ணீரையும் அவர் துடைப்பார். அவர் சாம்பலுக்கு சிங்காரத்தை கொடுக்கிறவர். முறிந்த ஆவிக்கு பதிலாக துதியின் உடையைக் கொடுக்கிறவர். ஒரு நாளும் உங்களை கைவிட மாட்டார். உங்கள் கண்ணீரை துடைப்பார். என்ன நடந்தது தெரியுமா? லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். மரித்து நான்கு நாட்கள் ஆகிய பிரேதம் உயிரோடு எழும்பி வந்தது. அல்லேலூயா. தன் சகோதரனை உயிரோடு மரியாளுக்கு ஒப்புக்கொடுத்தார். ஆண்டவரின் பாதத்தில் விழுந்து கண்ணீர் விட்டு ஜெபிக்கிற ஜெபத்திற்கு அவ்வளவு வல்லமை இருக்கிறது. கடவுளையே அது அசைத்து விடுகிறது. கடவுளையே கண்ணீர் விட வைக்கிறது.

## 3. விருந்திலே மரியாள்..

குஷ்ட ரோகியாய் இருந்து இயேசுவால் சுகமடைந்த சீமோன் என்ற ஒருவன் தன் வீட்டிலே ஸ்தோத்திர ஜெபக்கூட்டம் நடத்தி ஒரு பெரிய விருந்து கொடுத்தான். எல்லோரும் சந்தோஷமாயிருந்தார்கள். ஆனால் மரியாளோ? பாவ பாரத்தினால் கலங்கி தனக்கு பாவ மன்னிப்பு கிடைக்காதா? என்று ஏங்கி கண்ணீரோடு கூட அங்கே வந்திருந்தாள். இயேசுவை பார்த்தவுடன் இதை எப்படி வெளிப்படையாய் கேட்பது என கலங்கினாள்.

அவள் ஒரு காரியம் செய்ய தீர்மானித்தாள் அவள் வேகமாய் வந்து நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலை மயிரால் அவருடைய பாதங்களை துடைத்தாள். அப்பொழுது எல்லாரும் அவளை தடுத்தார்கள். ஆனால் உள்ளத்தை பார்க்கிற தேவன் அவள் வியாகுலங்களை அறிந்திருந்ததினாலே அவளைப் பார்த்து உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. நீ சமாதானத்தோடே போ என சொல்லி அவளை சந்தோஷத்தோடு அனுப்பினார். பேசாமல் பேசப்பட்ட அன்பின் மன்றாட்டு ஜெபம் அது. இயேசுவின் பாதத்தை பணிந்து ஆராதனை செய்ததினாலே ஏறெடுக்கப்பட்ட உன்னத ஆராதனை அது. வார்த்தைகள் இல்லை ஆனால் இயேசுவுக்கு அர்த்தங்கள் புரிந்தது. சூழ்நிலைகளை பார்க்காத வைராக்கியம் நிறைந்த ஜெபம் அது. சொல்லால் வெளிப்படுத்தப்படாத உணர்ச்சி நிறைந்த விண்ணப்பம் அது. மனிதர்களுக்கு புரியாது அந்த ஜெபம். ஆண்டவருக்கு மட்டுமே புரிந்த மன்றாட்டு அது. (யோவா-12:7)

என் அன்பு சகோதரிகளே, உங்கள் உள்ளம் ஆண்டவருக்கு மட்டுமே தெரியும். உங்கள் வேதனைகளை ஆண்டவர் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். மறைவாய் நீங்கள் ஏறெடுக்கிற ஜெபங்கள், பெருமூச்சின் சத்தங்கள், அமைதியான கூக்குரல்கள்,நிசப்தமான புலம்பல்கள் ஆண்டவருடைய சந்நிதியை எட்டுகிறது. கண்ணீருக்கு கணக்கு வைக்கிற கர்த்தர், வெளியரங்கமாய் உங்களுக்கு பதில் அளிப்பார். உங்களை மகிழ்ச்சியோடு வாழ வைப்பார்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து ஜெபத்தைக் கேட்டு கண்ணீரை துடைத்து இந்த ஆண்டு முழுவதும் உங்களுக்கு ஜெயத்தை அருள் செய்வாராக.

உங்கள் அனைவருக்கும் என் புத்தாண்டு வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிறிஸ்த்துவுக்குள்
அன்பு சகோதரன்
சபையின் ஊழியர் சகோ. ஸ்டாலின்











உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் - சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் - சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்- சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் -

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only